# அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி

# அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியில் தொழில் வாய்ப்புகள்

SMIB

SMIB, தேசத்தின் முதன்மையான வீடமைப்பு வங்கியாக, வங்கியின் செயற்பாட்டை மறுசீரமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது, இது வாடிக்கையாளரர்களுக்கு மிகவும் திருப்திகரமான மற்றும் பல்வேறு சேவைகளை வழங்கும் நிறுவனமாகும். அதுபோல, பின்வரும் தலைமைத்துவப் பதவிகளுக்கான பொருத்தமான தகுதிகள் மற்றும் அனுபவத்துடன் வணிக இலக்குகளை அடைவதற்கு ஆற்றல் மிக்க தலைமைப் பாத்திரங்களை வெளிப்படுத்தி முழு அர்ப்பணிப்புடன் செயற்படும் அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்களை நாங்கள் அழைக்கிறோம்.

## தரவு பகுப்பாய்வாளர் (Data Analyst)

**முக்கிய பொறுப்புகள்:**

- வர்த்தக செயற்றிறன், முன்னேற்றத்திற்கான பகுதிகள் மற்றும் வாடிக்கையாளர் தேவைகளைப் புரிந்துகொள்ள தரவு பகுப்பாய்வுகளைப் பயன்படுத்தி வர்த்தக நுண்ணறிவுகளை வழங்குதல்.
- முகாமைத்துவத் தேவையின் அடிப்படையில், சுருக்கமான வர்த்தக செயற்றிறனைக் காட்சிப்படுத்த காட்சிப்படுத்தல் டேஷ்போர்டுகளை வழங்குதல் மற்றும் விரிவான தகவல்களைப் பெற துளையிடுதல்.
- பல வணிக வரிகளின் முழுமையான பார்வையைப் பெற பல்வேறு தரவு மூலங்களிலிருந்து தரவை நிரப்புதல்.
- சிறந்த தெளிவு மற்றும் புரிதலுக்காக டாஷ்போர்டைப் பயன்படுத்தி நிதி நுண்ணறிவுகள் மற்றும் செயற்றிறன் தரவை வழங்குதல்.
- நிறுவனத் தேவைகளின் அடிப்படையில் பிற பல்வேறு முகாமைத்துவ மற்றும் இணக்க அறிக்கைகளை வழங்குதல்.
- பல்வேறு தரவு மூலங்களிலிருந்து ETL செய்து தரவு களஞ்சியம்/மாதிரிகளை உருவாக்குதல்.
- நிதி, வாடிக்கையாளர் மற்றும் தயாரிப்பு செயற்றிறனைக் கணிக்கத் தேவையானபடி AI மற்றும் ML என்பவற்றைப் பயன்படுத்துதல்.

**தகுதிகள் மற்றும் அனுபவம்**

- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து தகவல் தொழில்நுட்பத்தில் பட்டம், தரவு காட்சிப்படுத்தல் கருவிகள் (உ-ம் Tableau, MS Power BI போன்றவை) மூலம் முகாமைத்துவத்திற்குத் தேவைகளுக்கான தரவை காட்சிப்படுத்துவதில் ஒரு வருட அனுபவம் மற்றும் தரவு பகுப்பாய்வுக்கான ETL மற்றும் SQL வினவல்களில் ஒரு வருட அனுபவம்.
- அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து IT துறையில் உயர் டிப்ளோமா (NVQ 6ம் நிலைக்கு சமமான) பட்டம், தரவு காட்சிப்படுத்தல் கருவிகள் (உ-ம் Tableau, MS Power BI போன்றவை) மூலம் முகாமைத்துவத்திற்குத் தேவைகளுக்கான தரவை காட்சி ரீதியாக பிரதிநிதித்துவப்படுத்துவதில் இரண்டு வருட அனுபவம் மற்றும் தரவு பகுப்பாய்வுக்கான ETL மற்றும் SQL வினவல்களில் இரண்டு வருட அனுபவம்.
- அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து IT துறையில் டிப்ளோமா (NVQ 5ம் நிலைக்கு சமமான) பட்டம், தரவு காட்சிப்படுத்தல் கருவிகள் (உ-ம் Tableau, MS Power BI போன்றவை) மூலம் முகாமைத்துவத்திற்குத் தேவைகளுக்கான தரவை காட்சி ரீதியாக பிரதிநிதித்துவப்படுத்துவதில் நான்கு வருட அனுபவம் மற்றும் தரவு பகுப்பாய்வுக்கான ETL மற்றும் SQL வினவல்களில் நான்கு வருட அனுபவம்.

**சம்பளம்**

**சம்பள அளவு :** ரூ. 68,145 – 540 x 20 - 78,945 ஒரு மாதத்திற்கு வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் சகிதம். (வாழ்க்கைச் செலவுப்படி, வாடகை மற்றும் 10% கொடுப்பனவு) மொத்த மாதச் சம்பளம் ஏறத்தாழ 159,000.00 ரூபாவாகவிருக்கும்.

**வயது :** 35 வயதிற்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும். (எவ்வாறாயினும் ஏற்கனவே ஒரு அரச துறை நிறுவனத்தில் வேலை செய்பவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.)

**பொது நிபந்தனைகள்**

**தேர்வு முறை** - வங்கியின் ஆட்சேர்ப்பு கொள்கை மற்றும் நடைமுறைக்கு ஏற்ப விண்ணப்பங்கள் அழைக்கப்படும்.

**விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் - 2025-06-14**

**விண்ணப்பிக்கும் முறை**

ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்கள் தங்கள் சுய விபரங்களுடன் கல்வி/தொழில்சார் சான்றிதழ்களின் பிரதிகள் மற்றும் இரண்டு தொழில்சார் உறவினரல்லாத சான்றுபகர்வோரின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொடர்பு எண் என்பவற்றை பின்வரும் மின்னஞ்சல் ஊடாக அனுப்ப வேண்டும்.

அனைத்து விண்ணப்பங்களும் மிகவும் இரகசியமாகப் பேணப்படும் என்பதுடன் எந்த விதமான ஆதரவு பெற முயல்தல் தகுதியற்றதாக கருதப்படும். ஆட்சேர்ப்பு தெரிவை ஒத்திவைத்தல் அல்லது இரத்துச் செய்தல் அல்லது வேறு எந்த நடவடிக்கையும் மற்றும்/அல்லது இந்த ஆட்சேர்ப்புக்கான தேர்வு மூலப் பிரமாணங்களை மாற்றும் உரிமையை வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது. பணிப்பாளர் சபையின் தீர்மானம் இறுதியானதாகவும் மற்றும் உறுதியானதாகவும் இருக்கும்.

**விண்ணப்பங்களை Careers@smib.lk மூலமாக மட்டுமே அனுப்பப்படல் வேண்டும்.**